தாசநாயக்கன்பட்டியில் காவல் நிலையம் அமைத்தல்.

147—(*வினா எண் 13898) திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அலங்கியம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து தாசநாயக்கன்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அலங்கியம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து தாசநாயக்கன்பட்டியில் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசிடம் இல்லை என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

திரு. அ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாசநாயக்கன்பட்டியில் ஏற்கெனவே ஒரு புறக் காவல் நிலையம் இருந்து வந்தது. புதிதாக, அலங்கியத்தில் காவல் நிலையம் ஏற்படுத்துகின்றபொழுது, இந்தப் புறக் காவல் நிலையத்தை எடுத்துவிட்டு அந்தப் பகுதியினை அலங்கியம் காவல் நிலைய எல்லையோடு சேர்த்து விட்டார்கள். எனவே, மீண்டும் தாசநாயக்கன்பட்டியில் புறக் காவல் நிலையம் கொண்டு வர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. தாசநாயக்கன்பட்டியிலே செயல்பட்டு வந்த புறக் காவல் நிலையம் 1967-ல் காவல் நிலையமாக மாற்றப்பட்டு அலங்கியத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தாசநாயக்கன்பட்டியில் மீண்டும் புறக் காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமா என்பது பற்றி அரசு ஆராயும்.